# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 169 ஆங்கீரச வைகாசி 01 (14.05.1992) வியாழன்


## ஏறாவூரில் கைதான மதகுரு படையினரால் கொலை?

1990 ஆவணி மாதம் மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட கிறிஸ்தவ மதகுருவான வண சேப்பயர் குறித்து இதுவரை எந்த தகவலும் தெரியவரவில்லை. சம்பவதினம் தமிழ் இளைஞருடன் சென்ற இவரை வழிமறித்த படையினர் அத்தமிழ் இளைஞரை கைது செய்ய முயன்ற போது அதற்கு கிறிஸ்தவ மதகுரு எதிர்ப்புத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து படையினர் அவ்இளைஞருடன் அவரையும் கைது செய்து முகாமிற்கு இழுத்துச் சென்றனர். இதன் பின் அவர்கள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எவரும் அவர்களை காணவில்லை இவர்கள் படையினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

---

இணையமைச்சர் ஹேக்கப் அறிவிப்பு

## ராஜீவ் கொலை விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறதாம்

ராஜீவ் காந்தி கொலை விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக இந்திய உள்துறை இணையமைச்சர் எம் எம் ஜேக்கப் நேற்று இராஜிய சபாவில் தெரிவித்தார்.

விசாரணையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் எனவும், விசேட புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு ஸ்ரீலங்கா அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா ஸ்ரீலங்காவிடம் முறைப்படி கோரும் எனவும் அமைச்சர் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## புலிகளை ஆதரிக்கும் கட்சியையும் தடைசெய்யக் கோரிக்கை

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் ஓர் அரசியல் கட்சி தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் இக்கட்சியையும் தடைசெய்ய வேண்டும் எனவும் நேற்று இராஜ்யசபாவில் கோரிக்கை விடப்பட்டது.

காங்கிரஸ் உறுப்பினர் நாராயணசாமியே இக்கோரிக்கையை எழுப்பினார். இணையமைச்சர் ஜேக்கப் பேசிக்கொண்டிருக்கையில் இடையில் இவர் குறுக்கிட்டு இக்கோரிக்கையை எழுப்பியபோதும் அமைச்சர் இதற்கு பதிலேதும் அளிக்கவில்லை.

தமிழகத்தில் டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி தமிழீழத்திற்கு ஆதரவாக செயற்படுவருவதாக குற்றஞ்சாட்டப்படுவது தெரிந்ததே.

★ பிரட்மன் சொல்கிறார்

## பிரபா கைது செய்யப்பட்டாலே இந்தியாவிடம் ஒப்படைக்கலாம்

புலிகளின் தலைவர் பிரபாகரன் ஸ்ரீலங்கா அரசினால் கைது செய்யப்பட்டால் அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பதை பரிசீலிக்கலாம் என ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். எனினும் பிரபாகரனை எப்படி கைது செய்வது என்பதே இப்போதைய நிலை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புலிகளை தடைசெய்வது இந்தியாவைப் பொறுத்த விடயம் எனவும் பிரட்மன் மேலும் தெரிவித்தார்.

★ விஜயவாடா மாநாட்டில்

## பத்திரிகை சுதந்திரத்தை காக்குமாறு வேண்டுகோள்

தமிழகத்தில் பத்திரிகை ... டில் கோரிக்கை எழுப்பப்

---

# வடமராட்சி கிழக்கில் விமான குண்டு வீச்சு

## இரு பொதுமக்கள் படுகாயம் நான்கு வீடுகள் சேதம்

மருதங்கேணி; தாளையடிப் பகுதியில் நேற்று குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் இருபொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

வடமராட்சி கிழக்கில் நேற்றுக்காலை 10மணியளவில் மருதங்கேணி, தாளையடிப் பகுதியை வட்டமிட்ட இரு பொம்மர் விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதல்களை மேற்கொண்டன,

4 குண்டுகளை வீசித்தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி திரவியம் இராசேஸ்வரன் (40), அந்தோனி அமிரன் (24) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்,

4 வீடுகளும் பகுதி சேதத்திற்குள்ளாகின. (07)

## இரண்டாயிரம் ரயர் ரியூப் மாத இறுதியில் வரும்?

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் இரண்டாயிரம் சைக்கிள் ரயர் ரியூப்புக்களை மாத இறுதிக்குள் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு யாழ்செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சைக்கிள் ரயர்ரியூப்புக்களை தரைவழியாகவோ கடல்மார்க்கமாகவோ கொழும்பில் இருந்துவடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு கட்டுப்பாடைத் தலைமையகம் அனுமதி வழங்கியமை இங்கே குறிப்பிடத்தக்கது கடந்த முறை கொழும்பு சென்ற அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ் மாவட்ட மக்களின் போக்குவரத்துக்கு சைக்கிளின்தேவைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தியதையடுத்து அனுமதி கிடைத்துள்ளது. 47

## வாழைப்பழத்திற்கு மன்னாரில் தட்டுப்பாடு

மன்னாரில் வாழைப்பழத்துக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ 50 ரூபா வரை விற்கப்படுகிறது.

... இல் வரும் வாழைக்குலைகள் இரண்டொரு தினங்களில் முடிவடைந்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல மரக்கறிகளும் ...

---

தெல்லிப்பழையில்

## ஹெலி சூடு

நேற்று முன்தினம் பிற்பகலிலும், நேற்று முற்பகலிலும் கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான், தெல்லிப்பழைப் பகுதிகளில் ஹெலிகொப்டர் ஒன்று சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது 50

## மீனவர்கள் மீது படையினர் சூடு

மண்டைதீவில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 30 மணியளவில் குருநகர் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஆனால் மீனவர்கள் எதுவித பாதிப்பும் இன்றி கரை வந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 47

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

மீட்புநிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான கடன் மீளளிப்பு எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படும்.

மானிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, காரைநகர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 16ஆம் திகதி காலை 9 மணி

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில், வேலணை மங்கையற்கரசி மகா வித்தியாலயம், நல்லூர் பிற்பகல் 2மணி,

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு வடஇந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை 17ஆம் திகதி காலை 9 மணி.

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி சாவகச்சேரி இந்துக் கல்லூரி சங்கத்தானை. பிற்பகல் 3 மணி

## பிறப்பு இறப்பு அத்தாட்சி தமிழிலும் சிங்களத்திலும்

பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சி பத்திரங்கள் ஆங்கிலத்தில் பதியப்படமாட்டாது என பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்

வடகிழக்கு பகுதிகளில் மட்டும் தமிழ் மொழியில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

ஏனைய பகுதிகளில் சிங்கள மொழிமூலம் இவை பதியப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஷெல்லுடன் இணைந்த கண்ணிவெடி வெடித்தது

புக்கோட்டையில் புலிக ... இறது.

சுதந்திரத்தை காத்திட மத்திய அரசு ஆவன செய்திட வேண்டும் என நேற்று விஜயவாடாவில் கூடிய பத்திரிகையாளர் சங்கங்களின் மாநாட்டில் ... ப்பட்டது.

தமிழகத்தில் பத்திரிகைத் துறை இப்போது பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளதாகவும் அம்மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

கதிர்ப்பிடியில் இருந்து பட ... றன, 13

... லால் வைக்கப்பட்ட ஷெல்லுடன் கூடிய கண்ணிவெடி ஒன்று வெடித்ததில் இராணுவத் தரப்பில் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு ... றது.

கடந்த 7 ஆம் திகதி புல்மோட்டை 15 ஆம் கட்டைப் பகுதியில் காவலில் நின்ற படையினரே இதில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பெருமளவு சீனியை கப்பலில் தருவிக்க செயலகம் ஏற்பாடு

இம்மாத இறுதிக்குள் பெருந்தொகையான சீனி யாழ்ப்பாணம் வந்துசேரவுள்ளதால் சீனியை எதுவிதத் தட்டுப்பாடுமின்றி இனிமேல் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ளலாமென யாழ் மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கோமாரி கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள 1150 மெ. தொன் சீனியும் சகல ப.

— 04ஆம் பக்கம் பார்க்க

## சேடப்பட்டிக்கு ஆதரவாக 8 பேரவைத் தலைவர்கள்

தாம் பிறப்பித்த கைது ஆணைகளைத் தடைசெய்ய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோதிலும் சட்டப் பேரவை தீர்மானத்தை உயர் நீதிமன்றம் தடுக்கமுடியாது என்ற தமிழக சட்டப்பேரவை நிலைப்பாட்டை 8 மாநில சட்டப்பேரவை சபாநாயகர்கள் வரவேற்றுள்ளதாக சேடப்பட்டி முத்தையா நேற்றுத் தெரிவித்தார்.

குஜராத், அஸாம், மத்தியப்பிரதேசம், ஒரிஸா, ஆந்திரா, கேரளம், சிக்கிம், பீஹார் பேரவைகளின் சபாநாயகர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு இதைத் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதியில் குஜராத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை சபாநாயகர்

— 04ஆம் பக்கம் பார்க்க

## நயினாதீவு ஆசிரியை யாழ்ப்பாணம் வந்தார்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஆரம்பக் கல்வி பாட நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட நயினாதீவைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் அங்கிருந்து கொழும்பு சென்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இவருக்கு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தம்மை பயிற்சிக்கு செல்ல அனுமதி தருமாறு பலதடவை கடற்படையினரிடம் கூறியும் இம் மாதமே யாழ்ப்பாணம் வர அனுமதி வழங்கப்பட்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# வடக்குக்கிழக்கைத் துண்டாட

# கொக்குத் தொடுவாயில் குடியேற்றம்!

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் மணலாறு மாவட்டத்தை முற்றாகத் துண்டாடும் பெரும் முயற்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாகப் பல இராணுவ நிலைகளையும் சிங்களக் குடியேற்றங்களையும் அப்பகுதியில் நன்றாகத் திட்டமிட்டு ஏற்படுத்தி அதன்மூலம் சஜுபா புரவிலிருந்து கொக்குத் தொடுவாய் வரையிலான வழியை விடுதலைப்புலிகளின் பாவனையிலிருந்து தடுப்பதற்கான முயற்சியில் ஸ்ரீலங்கா இராணுவம் கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட வீதி அமைப்பு வேலைகள் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் இப்பொழுது தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வீதி வேலைகள் பூர்த்தியடைந்தால் இங்கேக் குடியேற்ற நடவடிக்கைகள் இராணுவ உதவியுடன் மேலும் தீவிரமாக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நடவடிக்கை விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்கு என்பதிலும் பார்க்க, வடக்கிலிருந்து கிழக்கைத் துண்டாடுவதற்கான ஒரு திட்டமிட்ட சதி நடவடிக்கை என்பதுவே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டுமென அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு, காலி, களுத்துறையில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு

கடந்த மூன்று தினங்களாக பெய்துவரும் பெருமழையினால் தென்பகுதியில் வெள்ளப் பெருக்கு, மண்சரிவு என்பன ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, காலி, களுத்துறை மாவட்டங்களே அப் பெருமழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கள் முதல் பெய்துவரும் மழையினால் இம் மூன்று மாவட்டங்களிலும் 3000 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதிகளில் பல வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளப் பெருக்கினால் 350 வீடுகள் அள்ளப்பட்டுச் சென்றுள்ளன. 25 இலட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் பத்தேகமவில் இடம்பெற்ற மண்சரிவினால் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

## அடிப்படை வசதியற்ற அறையில் அடைக்கப்பட்டு பழிவாங்கப்பட்டேன்

**- சாலி**

தான் கைதுசெய்யப்பட்டமை அரசியல் உள்நோக்கம் கொண்டது என தமிழகத்தின் பிரபல பத்திரிகையாளரும், எழுத்தாளருமான 'சாலி' (சா. சிவநாதன்) தெரிவித்துள்ளார்.

'சாலி' வார இதழின் ஆசிரியரான இவர் கைது செய்யப்பட்டு சில மணி நேரத்தின் பின் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

காவல்துறை நிலையத்தில் காற்று, குடிநீர், வெளிச்சம் இன்றிய அறையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுத் தான் பழிவாங்கப்பட்டதாகவும் "சாலி" தெரிவித்துள்ளார்.

## சுயஸ் கால்வாய் மேலும் ஆழமாக்கப்படவுள்ளது

சுயஸ் கால்வாய் மேலும் ஆழமாக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கால்வாயின் தற்போதைய ஆழம் 18 மீற்றராகும். இது 22 மீற்றராக ஆழமாக்கப்படவுள்ளது.

இதனால் மத்திய தரைக் கடலிலிருந்து செங்கடலுக்கு உலகின் பெரிய வர்த்தகக் கப்பல்கள் நேரடியாகச் செல்ல முடியும்.

கால்வாயை நவீனமயப்படுத்தும் பணி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## வடக்கு, கிழக்கு இணைப்பை வலியுறுத்த முடிவு

தமிழர் பிரச்சினைக்கு அரசாங்கத்தால் முன் வைக்கப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் இணைந்த வட கிழக்கு மாகாணத்திற்கு சுயாட்சி வழங்குவதை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டுமென ஏழு தமிழ் அரசியற் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இந்த ஏழு தமிழ் அரசியற் கட்சிகளும் கொழும்பில் கூடி தீர்வில் பொது நிலைப்பாட்டைப் பின்பற்றுவதெனத் தீர்மானித்துள்ளன எனவும் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. இவை இது தொடர்பாக எடுக்க வேண்டிய கூட்டு நடவடிக்கைகள் பற்றிக் கொடார்ந்தும் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு இம் மாதம் 19 ஆம் திகதி கூடும் பொழுது தமது ஏகோபித்த நிலைப்பாட்டை இக் கட்சிகள் முன் வைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நாடு முழுவதிலும் 200 பிராந்திய செயலகங்கள்

நாடு முழுவதிலுமுள்ள 200 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்படவுள்ள பிராந்திய செயலகத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் நிர்வாகம் மக்களின் வாசற்படிக்குக் கொண்டு வரப்படும் எனத் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (06)

## மேலதிக இராணுவம் மன்னாருக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்

மன்னாருக்கு மேலதிக இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகத்தை மேற்கோள் காட்டி நேற்று வெளியான கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னாரில் குடியமர்த்தப்படும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவே இப் படையினர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தம்புள்ள ஹோட்டலினால்

## 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

முரசொலி நிறுவனத்தின் அனுசரணையுடன் ... இப்போட்டியில், சகோதர ...

## ஆபத்தான மிருகங்களை கட்டுப்படுத்தும் 'ப்ளேகன்'

அருகில் நெருங்க முடியாத ஆபத்தான மிருகங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 'ப்ளேகன்' என்ற உபகரணத்தை மிருக வைத்தியர்களும், மிருக பராமரிப்பாளர்களும் தற்பொழுது பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்த உபகரணத்தை விலங்கை நோக்கி இயக்கினால் அதில் பொருத்தப்பட்டுள்ள ஊசி பாய்ந்து போய் விலங்கின் உடம்பில் குத்திக்கொள்ளும்.

குறிப்பாக விலங்கின் பின்னங்காலின் தொடைப் பகுதியிலேயே இந்த ஊசியைப் பாய்ச்சுவார்கள்.

இந்த ஊசியினுள் ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் மயக்க மருந்து இவ்வாறாக விலங்கின் உடம்பினுள் செலுத்தப்பட்டதும் அது மயக்கமடையும். அதன் பின்னர் விலங்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள்.

இந்த ஊசியில் பயன்படுத்தப்படும் மயக்கமருந்தின் அளவு விலங்கின் தன்மை, எடைக்கேற்ப மாறுபடும்.

இவ்வாறு மயக்கமடையச் செய்யப்படும் விலங்கு பின்னர் சுயநினைவு பெற மாற்று மருந்து ஒன்றைச் செலுத்துவார்கள். மயக்கமான விலங்கு மீண்டும் சுய உணர்வு பெற சில சமயம் மணிக்கணக்கில் கூட ஆகும்.

இந்த மாதிரி அடிக்கடி மிருகங்களுக்கு மயக்க மருந்து செலுத்தப்பட்டால் இதயம் பலஹீனமாகி அவை இறந்துவிடவும் நேரிடும்.

## பூனை கடித்து சிறுவன் மரணம்

நாய்க்கு மட்டும்தான் வெறி வரும் என்றில்லை - குரங்கு, எருமை, ஏன் பூனை கடித்துக் கூட மனிதர்கள் இறந்துள்ளனர்.

வெள்ளவாய எத்திலி வெவ என்ற இடத்தில் பூனை கடித்ததால் 5 வயதுச் சிறுவன் மரணமான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பிரேதபரிசோதனை நிகழ்த்திய டாக்டர் மகிந்த பெரேரா பூனை விஷத்தால் இம் மரணம் சம்பவித்ததாகத் தனது அறிக்கையில் தெரிவித்தார். (06)

## இராமேஸ்வர கடலில் மிதவை சோதனை நிலைகள்

கடலுக்குச் செல்லும் மீன்பிடிப் படகுகளையும் கரைக்கு வந்து சேரும் மீன்பிடிப் படகுகளையும் சோதனையிட இராமேஸ்வரம் மீன்பிடித் துறையில் இரண்டு மிதவை சோதனை நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தீவிரவாதிகள் தமிழ் நாட்டுக்குள் பிரவேசிப்பதையும் கடத்தலையும் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையே இது எனத் தெரிவிக்கப்பட்டது. 06

## அவசர நோயாளர்களை தரைமார்க்கமாக அனுப்ப முயற்சி

அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய நோயாளர்களை தரைமார்க்கமாக அம்புலன்ஸ்வண்டி மூலம் அனுப்பி வைப்பதற்கான புதிய முயற்சியொன்று எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய்ப் பிரிவு இதற்கான முயற்சிகளை எடுத்துள்ளது.

கொழும்பிற்கு சிகிச்சையின் பொருட்டு செல்ல வேண்டியுள்ளோர் அம்புலன்ஸ் வசதியைப் பெற செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம். (06)

## பொது இலிகிதர்களுக்கு

## தம்புள்ள ஹோட்டலினால் வறியவர்கள் பயனடைவர் - தொண்டமான்

தம்புள்ளவில் சர்ச்சைக்குரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல் அமைப்பதற்கெதிரான தமது எதிர்ப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தொடரும் என தம்புள்ள விகாரையின் பிரதம விகாராதிபதி இனாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த எதிர்ப்பு பத்திரிகைகளில் மட்டுமே காணப்படுவதாகவும் அவற்றைப்பெரிதாக நாம் கணிக்கவில்லையெனவும் சுற்றுலாத்துறை அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமது எதிர்ப்புக் குரல் எடுபடவில்லை என்பதால் எதிர்ப்பாளர்களே விகாரையின் நூலகத்திற்கு தீவைத்து இப்பிரச்சினையை தேசியப் பிரச்சினையாக்க முயற்சித்துள்ளனர் எனவும் திரு. தொண்டமான் கூறியிருப்பதுடன் இத் திட்டத்தின் மூலம் இப் பகுதியிலுள்ள வறியவர்கள் பயனடைவார்கள் என்றும் கூறியுள்ளார்.

முரசொலி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ் சதுரங்க சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள சதுரங்கப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.

அகில உலக ரீதியில் பிரபல்யம் அடைந்துவரும் ''பீ வொலிபோக்'' என்றழைக்கப்படும் மூன்று வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் இப்போட்டியில் 'நவி' என்ற புதுமுறையில் சர்வதேச விதிகளுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில், சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களே கலந்து கொள்ளலாம். சம்மேளனத்தில் அங்கம் வகிக்காத கழகங்கள் சம்மேளனத்தில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்துகொண்ட பின்பு போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கலாம்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்குப் பிந்தாமல் தமது விண்ணப்பங்களை சே. ஏகாம்பரம் கௌரவ காரியதரிசி, இல 87 இராசவீதி நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## பொது இலிகிதர்களுக்கு பதவி உயர்வு

பொது எழுதுநர் சேவையின் தரம்-2 'ஏ' பிரிவில் 15 வருடம் சேவையைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் அனைவரும் முதலாம் தரத்துக்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

மேற்படி சேவையின் தரம்-2 'ஏ' பிரிவில் 10 வருடம் சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர். ஆனால் இவர்களுக்கான பரீட்சை நடாத்தப்படும். 06

## புதிய அத்தியட்சகர்

யாழ் மாவட்ட புதிய தபால் அத்தியட்சகராக திரு கே. இராஜேந்திரம் தபால் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (06)

## இயந்திரம்

மன்னார் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (23)

## காங்கேசன் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை

காங்கேசன்துறைக் களஞ்சியத்தில் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தி, லொறிகள் மூலம் குடாநாட்டுக்குள் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மழைகாலத்தில் பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கமுடியாத நிலை ஏற்படுவதும் இதற்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு சிறிய கப்பல்களில் பொருள்களை எடுத்துவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மாரிகாலத்திலும் காங்கேசன் துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## ● பிலிப்பைன்ஸ் தேர்தல் முடிவுகள் சந்தியாகோ, ராமோஸ் இடையில் கடும் போட்டி நிலவுகிறது

பிலிப்பைன்ஸ பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை தொடரப்பட்டுவரும் இவ்வேளையில் முன்னாள் வழக்கறிஞரான பெண்மணி மேரியம் சந்தியாகோவிற்கும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதி அக்கியூனோவின் ஆதரவு பெற்ற ராமோசுக்குமிடையில் கடும்போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது

இரண்டு கோடிக்கும் அதிகமான வாக்குகள் எண்ணப்படவேண்டியுள்ள நிலையில் இதுவரை 8 சதவீதமானவாக்குகளே எண்ணப்பட்டுள்ளன

இந்நிலையில பெண்மணியான மேரியம் சந்தியகோ 8லட்சம் வாக்குகள் பெற்று முன்னிலையிலும் ராமோஸ 7லட்சம் வாக்குகள் பெற்று சிறிய இடைவெளியில் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்

முன்னாள் ஜனாதிபதியின் மனைவியான இமெல்டா மார்க்கோஸ வாக்கு எண்ணிக்கையில் ஐந்தாவது இடத்தில் உள்ளார்

தேர்தல் முடிவுகள் முழுவதும் வெளியாக இரண்டு வாரங்கள் செல்லும் எனக் கூறப்படுகிறது.

## வவுனியா கண்டி வீதியில் புதிய பொலிஸ் நிலையக்கட்டிடத் தொகுதி

வவுனியா-கண்டி வீதியில் 90 இலட்சம் ரூபா செலவில் பொலிஸ் நிலையக் கட்டிடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது

பொலிஸ் நிலையம், பொலிஸ் உயரதிகாரிகளின் அலுவலகங்கள், விடுதிகள் என்பன இக்கட்டிடத் தொகுதியில் உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வவுனியா மாவட்ட நீதிமன்றக் கட்டிடமும் 75 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. (06)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளை, தலைமையகம்

### விரிவுரையாளர் பயிற்சி நெறி

1. முதலுதவி
2. ஆரம்ப சுகாதார கவனிப்பு
3. இளைஞர் சேவை
4. அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தல்

மேற்படி இலவச பயிற்சிநெறி ஒவ்வொன்றிற்கும் யாழ் குடாநாட்டில் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த சங்க உறுப்பினர்கள், தொண்டர்கள் ஆகியோரில் பிரிவிற்கு இருவரும் ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து ஒருவரும் தெரிவு செய்யப்படுவர்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 21-05-92 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். 23-05-92 காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13-05-92

05028


## ★ இந்திய விண்வெளி ஆய்வுநிறுவனத் தலைவர்: அமெரிக்காவின் இருவருடத் தடை விரைவில் நீக்கப்படும்என நம்பிக்கை

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (I. S. R. O.) மீது அமெரிக்கா விடுத்துள்ள இருவருடத் தடையினால் இந்திய ஆய்வுகள் பாதிக்கப்படமாட்டாது என இந்த நிறுவனத்தின் தலைவர் டாக்டர் யூ. ராவ் நேற்றுத் தெரிவித்தார்.

ரஷ்யாவிடமிருந்து ரொக்கட் எஞ்ஜினைப் பெற இந்தியா முயற்சித்தமையே அமெரிக்காவின் தடைக்கு காரணம் எனினும் ரஷ்யாவின் ரொக்கட் எஞ்ஜின் ஒன்று 2 கோடிக்கு செலவு செய்யக்கூடிய நிலையில் அமெரிக்காவின் ரொக்கட் எஞ்ஜின் 6 கோடி ரூபா செலவுபிடிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அமெரிக்காவின் இத்தடை இரு வருடங்களுக்கு நீடிக்கப்படமாட்டாது எனத் தான் நம்புவதாகவும் சீனாவிற்கான தடை இடையில் தளர்த்தப்பட்டதைப் போன்று இது தளர்த்தப்படலாம் எனவும் டாக்டர் ராவ் கூறினார்.

அமெரிக்காவின் தடையை ரஷ்யா கண்டித்துள்ளதுஇங்கு குறிப்பிடத்தக்கது.

### பொருள் காட்சி

கிராம அபிவிருத்திப் பகுதியின் தையல், மனையியல் கைப்பணிப் பொருள் காட்சி நாளைக்காலை 9 மணிக்கு நாவலர் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

### பரவலாக மழை

குடாநாட்டின் பல இடங்களில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று முழுவதும் பரவலாக மழை பெய்தது

சில இடங்களில் திடீர் காற்றும் வீசியதால் பயன்தருமரங்கள் வீழ்ந்ததைக்காண முடிந்தது 15

### நயினாதீவு...

டதாகவும் அவர் கூறினார்.

நயினாதீவில் ஆசிரியர்களுக்கு சம்பளம் காசோலையாகவே வழங்கப்படுவதாகவும் அதனை மாற்ற காரைநகருக்கு செல்ல வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

தான் காரைநகருக்கு படகில் வந்ததாகவும் அங்கிருந்து காங்கேசன் துறைக்கும் பின்னர் திருகோணமலைக்கும் படகில் அனுப்பப்பட்டதாகவும் திருகோணமலையில் இருந்து புகையிரதம் மூலம் கொழும்பு வந்து பின்னர் யாழ்ப்பாணம் வந்ததாகவும் அவர் மேலும் சொன்னார்

### சேகப்பட்டி...

கள் மாநாட்டில் சமஷ்டிப்பேரவையின் இறைமையைக் காக்க தகுந்த முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அந்த 8 சபாநாயகர்களும் உறுதி தெரிவித்தனராம்.

### பெருமளவு...

தோ. க. சங்கங்களுக்கும் விநியோகிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அடுத்தமுறை பருத்தித்துறைக்கு வரவுள்ள குமண கப்பலில் சீனி மட்டுமே எடுத்துவருவதற்கு யாழ் செயலகம் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது போதியளவு சீனி யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார், கூட்டுறவுக் கடைகளில் இருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

## பர்தா அணியாத பெண்கள் மீது காஷ்மீரில் சாயம் வீச்சு

காஷ்மீரில் நேற்று பர்தா எனும் முஸ்லிம்களின் உடை அணிந்திராத பெண்கள் மூவர் மீது காஷ்மீர் முஸ்லிம் தீவிரவாதிகள் சாயம் வீசினர்.

முஸ்லிம் பெண்கள் கட்டாயம் பர்தா என்ற இந்தப் பாரம்பரிய உடையை அணிய வேண்டும் எனவும் மீறுவோர் பின்விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் எனவும் முஸ்லிம் தீவிரவாதிகள் எச்சரித்தனர்

முகத்தில் சாயம் வீச்சுக்கு இலக்கான பலபெண்கள் வீதியில் அழுதவாறு சென்றதாகவும் முஸ்லிம் சட்டத்தை கடைபிடிக்குமாறு பெண்களை மட்டும் ஏன் வற்புறுத்த வேண்டும் என அவர்கள் கேள்வி எழுப்பினர் எனவும் செய்திகள் தெரிவித்தன.

## சுவீகார குழந்தைகளை ஒப்படைக்க உத்தரவு

அரச சார்பற்ற சிறுவர் சுவீகார நிலையங்களிலுள்ள குழந்தைகள் அனைவரும் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட அவ்வாறான இல்லங்களில் உடனடியாக ஒப்படைக்கப்பட்டு விட வேண்டுமென சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 11 ஆம்திகதியுடன் தனிநபர்களோ, தனியார் நிறுவனங்களோ சிறுவர்களை சுவீகாரம் செய்ய முடியாதென அரசாங்கம் தடைவிதித்தது இத்தடையையும் மீறி சில நிறுவனங்கள் இயங்குவதாகக்கிடைத்த தகவலைத் தொடர்ந்தே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 6

## தென் லெபனானில் இஸ்ரேல் விமானம் தாக்கு

தென் லெபனானின் சியா முஸ்லிம் தீவிரவாதிகள் இலக்குகள் மீது நேற்று இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின

இத்தாக்குதலில் மூன்று தீவிரவாதிகள் காயமடைந்தனர் பாடசாலை கட்டிடம் ஒன்று சேதமானது.

இஸ்ரேல் ஆதரவு பெற்ற தென் லெபனான் இராணுவம் மீது சியா முஸ்லிம்கள் நேற்று முன் தினம் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாகவே இஸ்ரேல் இத்தாக்குதலை நடத்தியுள்ளது

## முழங்காவிலில்மடுஅகதிகள் பொருள்களை வாங்குகின்றனர்

மடு அகதிகள் தமக்குரிய பொருள்களை முழங்காவில் பகுதியில் வந்து வாங்குகின்றனர்.

வடபகுதி பொருள்கள் முழங்காவில் பகுதிக்கு வர்த்தகர்களால் கொண்டு வரப்படுகின்றன

முன்னர் இந்த வர்த்தகர்கள் மன்னாருக்கு விடத்தல்தீவு ஊடாக தமது பொருள்களைக் கொண்டு சென்றனர்

### கொழும்பு பல்கலைக கழகம் இறக்கப்படும்

திடீரென மூடப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகம் எதிர்வரும் திங்கள் மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

மாணவர் அமைதியின்மையை அடுத்தே பல்கலைக்கழகம் மூடப்பட்டது

இதேவேளை மாணவர்கள் பிரதிநிதிகளும் பல்கலைக்கழக அதிகாரிகளும் இன்று அமைச்சர் ஹமீதுடன் பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

### பயிற்சிக்கு செல்ல முடியாத நிலை

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களும் ஆசிரியைகளும் நேற்றுமுன்தினம் தொடக்கம் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருவதனால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாடசாலைகளுக்கு தமது கற்பித்தல் பயிற்சிகளுக்கு செல்ல முடியாத நிலை உருவாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (15)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 14-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது